

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011- 2012)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

23–11–2011ஆம் நாளன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 17 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

23–11–2011ஆம் நாளன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

	பக்கங்கள்
1. குழு உறுப்பினர்கள்	iii
2. அறிக்கை	v-vi
இணைப்பு-I	1–23
இணைப்பு-II	27–63
இணைப்பு-III	67–78

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

நான்காவது அறிக்கை

முன்னுரை

2011-2012-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14-07-2011-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 23-11-2011-ஆம் நாளன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அம்மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 289 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 100 மனுக்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 72 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ஆம் நாளன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழு கூடியது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்கள், குழு முன் பதிலளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 72 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 23 மனுக்கள் குறித்துக் குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 37 மனுக்கள் மீது துறைகளால் அளிக்கப்பெற்ற பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 12 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாக கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

11-04-2012 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

சென்னை-600 009,
11-04-2012,
பங்குனித் திங்கள் 29ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு-2043.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	999	திரு. எஸ். தமீமுல் அன்சாரி, ஊராட்சி மன்ற உறுப்பினர், இளையாலூர், தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.	மஞ்சளாற்று கிளை வாய்க்காலான அரிசன் வாய்க்காலின் இடையில் படுக்கை அணை மற்றும் நரிக்குடி பாசன வாய்க்கால் மதகுகள் புதுப்பித்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மஞ்சளாற்றில் அரிசன் வாய்க்கால் பிரிகிறது. அதிலிருந்து "பி" பிரிவு நரிக்குடி வாய்க்கால் பிரிகிறது. மனுதாரர் அரிசன் வாய்க்காலில் படுக்கை அணை கட்டக் கோரியுள்ளார். நரிக்குடி வாய்க்கால் 6.00 கி.மீ. ரூ. 10.00 இலட்சம் மதிப்பில் தற்போது தூர்வாரப்பட்டு, கடைமடை வரை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. எனவே படுக்கை அணை தேவையில்லை. மேலும் நரிக்குடி வாய்க்காலின் குறுக்கேயுள்ள மதகுகள் நடப்பு பாசனத்திற்கு பின், கோடை காலத்தில் மட்ட அளவுகள் எடுத்து தல நிலைமைக்கேற்ப தேவையிருப்பின் மதகுகள் புதுப்பித்து கொடுக்கப்படும். *[செயற்பொறியாளர், நீ.ஆ.து., காவிரி வடிநில கோட்டம் (கிழக்கு), அவர்களின் கடித எண். 289எம் / கோ. 38 / சம.குமு / 2011 / வ2 / நாள்: 26–08–2011.]*	நரிக்குடி வாய்க்கால், ஏற்கனவே, தூர்வாரப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளதால் அரிசன் வாய்க்காலின் இடையில் படுக்கை அணை தேவையில்லை எனவும், மேலும் நரிக்குடி வாய்க்காலில் ஜனவரி இறுதியில் தண்ணீர் நிறுத்தப்பட்ட பின்பு மார்ச் மாதத்திற்குள் புதுப்பித்துத் தருவதாக மயிலாடுதுறை செயற்பொறியாளர் காவிரி வடிநிலக் கோட்டம் கிழக்கு அவர்கள் நேரடி ஆய்வின்போது தெரிவித்ததைத் தொடர்ந்து இதனை நிறைவேற்றிட குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	1001	திரு. சு. பிரகாசம், தலைவர், வல்லமங்கலம் வாய்க்கால் பாசன விவசாயிகள் குழு, 48, வடக்கு வீதி, அன்னை இல்லம், கீழ்வேளூர்–611 104, நாகப்பட்டினம் மாவட்டம்.	பாசன வாய்க்கால் சீர் செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
ஓடம்போக்கியாற்றிலிருந்து பிரிந்து வரும் பாசன வாய்க்கால் உடைப்புகளை சரிசெய்ய மதிப்பீடு தோராயமாக ரூ.10.00 இலட்சம் ஆகும். வரும் நிதியாண்டில் (2012–2013) பணிமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது பாசன வசதி பெறுவதற்கு தேவையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்ற வட்டாட்சியர் மூலம் நில அளவை செய்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ஆக்கிரமிப்பு சம்பந்தமாக உதவிப்பொறியாளர், பொ.ப.து., வெண்ணாறு வடநில பிரிவு எண்.1, நாகப்பட்டினம் கடித எண். 14/2011/ நாள் 09–09–2011–ல் கீழ்வேளூர் வட்டாட்சியரிடம் விரிவான பதிலறிக்கை கோரப்பட்டுள்ளது. *[செயற்பொறியாளர், பொ.ப.து., வெண்ணாறு வடிநில கோட்டம், திருவாரூர், அவர்களின் கடித எண். 383 எம்/கோ 110 (சமமகு) / 2011 / வ1 / நாள்: 12–10–2011.]*	வரும் மார்ச் மாதத்திற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றி அது தொடர்பான அறிக்கையினை குழுவிற்கு அளிக்க கீழ்வேளூர் வட்டாட்சியருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	1005	திரு. ஜி. கனகசுந்தரம், ஊராட்சிமன்றத் தலைவர், திருப்பூண்டி கிழக்கு ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்–610 204.	திருப்பூண்டி கிழக்கு ஊராட்சியில் உள்ள கீரனோரியை ஆழப்படுத்தி, கரையை அகலப்படுத்த கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.	
(5)	(6)	
திருப்பூண்டி கிழக்கு ஊராட்சியில் உள்ள கீரனோரியை 2005–06–ல் ஐந்து லட்சம் மதிப்பீட்டிலும், 2006–07ம் ஆண்டில் நான்கு லட்சம் மதிப்பீட்டிலும் ஆழப்படுத்தி கரையை அகலப்படுத்திய பணி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டிலும் ஏரியை ஆழப்படுத்திட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், கீழையூர் அ.கு.எண். 611 103 அவர்களின் கடித எண். 2886/2011/ஆ4, நாள்: 08–11–2011.]*	ஏரியை ஆழப்படுத்தியும், கரையை வலுப்படுத்தவும் உரிய திட்டத்தினை தேர்ந்தெடுத்து இப்பணியை நிறைவேற்றிட பொதுப்பணித் துறை செயற் பொறியாளர், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கையாக அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.	3

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	1009	திரு. டி.ஜி. அழகர், 19.இ. நல்லமுத்தான் தெரு, மயிலாடுதுறை.	மயிலாடுதுறை கூறைநாடு கிட்டப்பா மேல்நிலைப்பள்ளி மயிலாடுதுறை மாமரத்துமேடை நெ.2 ரோடு இதற்கு இடைப்பட்ட தூரத்தில் சிமெண்ட் சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள மயிலாடுதுறை நகரம் வார்டு எண்:5, பிளாக் எண்:5, நகரளவு எண்: 92/2ஏ, சிதம்பர செட்டியார் மகன் ராமசாமி என்பவருக்கு சொந்தமான இடமாகும். நிலவியல் பாதையாக தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. நில உடமைதாரர் நகராட்சிக்கு இடத்தை வழங்கும் பட்சத்தில் சிமெண்ட் சாலை அமைக்க இயலும். *[ஆணையாளர், (பொ) மயிலாடுதுறை நகராட்சி, அவர்களின் கடித எண். 10565/2011/எப்2 நாள்: 26-08-2011.]*	40 ஆண்டுகால பிரச்சினையாகவுள்ளதால், தனியார் வசமுள்ள பகுதியை பெற உரிய நடவடிக்கை மேற்கொண்டு, சாலைவசதி செய்து தருமாறு மாவட்ட வருவாய் அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
5	1021	திரு. டி.ஜி. அழகர், 19, நல்லமுத்தான் தெரு, மயிலாடுதுறை.	மயிலாடுதுறை–மூவலூருக்கும்–ஏ.வி.சி. கல்லூரிக்கும் இடையே ஒரு மினி பேருந்து (அல்லது) நகரப் பேருந்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மூவலூர்–ஏ.வி.சி.கல்லூரி (வழி) மயிலாடுதுறை தட நீளம்–8 கி.மீ. மூவலூர்–மயிலாடுதுறை பேருந்து நிலையம் 4 கி.மீ. தடப்பகுதியில் 12 நகர தடப் பேருந்துகள் மூலம் 148 நடைகளும், மயிலாடுதுறை பேருந்து நிலையம் ஏ.வி.சி. கல்லூரி 4 கி.மீ. தடப்பகுதியில் 14 நகர தடப் பேருந்துகள் மூலம் 174 நடைகளும் இயக்கப்படுகிறது. மேலும் இவ்விரு தடங்களிலும் புறநகர் பேருந்துகளும் அதிகளவில் இயக்கப்படுகிறது. அனைத்து புறநகர் பேருந்துகளிலும் மூவலூர் மற்றும் ஏ.வி.சி. கல்லூரியில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி வருகின்றனர். மயிலாடுதுறை பேருந்து நிலையம் இரண்டு இடங்களிலும் தற்பொழுது இயங்குவதை மாற்றி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் விரைவில் அமைய உள்ளதால் பகுதி, பகுதியாக மேற்படி தடத்தில் உள்ள அதிகளவிலான பேருந்து வசதியையே பயன்படுத்திக்கொள்ளலாம். *[மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் மண்டலம், கும்பகோணம். அவர்களின் கடித எண். தஅபோக/கும்ப/சிடி 7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	மக்கள் தேவைகளை உணர்ந்து மேற்படி வழித்தடத்தில் மினி பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தர பரிசீலனை செய்யுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	1024	திரு. எம்.எஸ். மூஜீபுஷரிக், மாவட்ட அமைப்பாளர், விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம் மற்றும் தலைவர், கடலோர கிராம பாதுகாப்பு கமிட்டி வேட்டைக்காரனிருப்பு – 611 112, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் பிரேதங்களை பாதுகாக்க குளிரூட்டும் வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நாகப்பட்டினம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிண பரிசோதனை அரங்கு கட்டிடம் கட்டுதல் பணிக்கு நாகப்பட்டினம் செயற்பொறியாளர் கட்டிடம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் அவர்கள் மூலம் 50.05 இலட்சத்திற்கு அனுப்பியுள்ள நிதி ஒதுக்கீடு வேண்டி அனுப்பிய கருத்துரு இவ்வலுவலக ந.க.எண்.3460/திவ/2011 நாள்: 02–08–2011–ன்படி சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய பிண பரிசோதனை அரங்கு கட்டிடம் கட்டுவதற்கு உரிய நிதி ஒதுக்கீடு கோரும் கருத்துருவினை கேட்டு, இவ்வலுவலக ந.க.எண்.3456/திவ/2011 நாள்: 29–08–2011–ன்படி நாகப்பட்டினம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கட்டிடம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் அலுவலகத்துக்கு தபால் அனுப்பப்பட்டுள்ளது. *[சுகாதாரப்பணிகள் இணை இயக்குநர் நாகப்பட்டினம் அவர்களின் கூத எண்கள் 1. ந.க.எண்.3460 / திவ / 2011 நாள்: 02–08–2011. 2. ந.க.எண்.3460 / திவ / 2011 நாள்: 29–08–2011.]*	நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிண பரிசோதனை அரங்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப்பணி இணை இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	1037	திரு. எஸ். பஞ்சநாதன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், இலுப்பூர்	இலுப்பூர் கிராமம் – கடுவையாற்றின் குறுக்கே ஊரக வளர்ச்சி துறை மூலம் பாலம் அமைத்து தரக் கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
இலுப்பூர் மற்றும் தேவூர் கிராமங்களுக்கு இடையே நடைபாலம் ஒன்று உள்ளது. இதன்நீளம் 38 மீட்டர் ஆகும். தற்சமயம் இந்த பாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. மேற்படி இடத்தில் புதிய நடைபாலம் கட்டுவதற்கு ரூ.10/– இலட்சம் மதிப்பீடு ஆகும். இதனை வரும் நிதியாண்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். *[ஆணையர் ஊராட்சி ஒன்றியம், கீழ்வேளூர் கடித எண் 18630/எச்.2/ 2011/நாள்: 22–08–2011.]*	வரும் நிதியாண்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் ஒன்றிய குழுத்தலைவர் நிதியினைப் பெற்று இப்பணியினை விரைவில் முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	1043	திரு. க. சரவணமுத்து, குரவப்புலம்.	நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், குரவப்புலம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டியும், கத்தரிப்புலம் என்ற இடத்திலிருந்து குரவப்புலம் பகுதி வரை, உள்ள உயரழுத்த மின்கம்பியை மாற்றித்தரவும் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.	
(5)	(6)	
குரவப்புலம் கிராமத்தில், குரவப்புலம் கிழக்கு என்ற புதிய மின்மாற்றியை அமைக்க Sanc. No. DEV/14–656 348/09–10, மூலம் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு புதிய மின்மாற்றி அமைப்பதற்கான பணி இளமின் பொறியாளர்/கட்டுமானம்/வேதாரண்யம் அவர்களால் செய்யப்பட்டு வருகிறது. போதிய தளவாடச் சாமான்கள் இருப்பில் இல்லாததால் காலதாமதமாகிறது. இவை விரைவில் பெறப்பட்டு விரைந்து மின்மாற்றி அமைக்கப்படும். கத்தரிபுலம் முதல் குரவப்புலம் வரை உள்ள உயரழுத்த மின் பாதையின் கம்பியை மாற்றிடவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். *[மேற்பார்வை பொறியாளர், நாகை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகப்பட்டினம். அவர்களின் கடித எண். மே.பொநாமிபவ/நாகை/உ..செ.பொ/வ/க.எ/கோ.புகார்/ அ.எண். 443/11 நாள்: 27–08–2011.]*	கத்திரிபுலம் முதல் குரவப்புலம் வரை உள்ள உயரழுத்த மின் பாதையின் கம்பியை மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.	∞

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
9	1044	திரு. பி.எஸ். சேதுபதி, கிராம நாட்டாண்மை, ஆறுகாட்டுத்துறை அஞ்சல், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.	ஆறுகாட்டுத்துறை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கற்றுச்சுவர் ஏற்படுத்தி தரக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
ஆறுகாட்டுத்துறை அரசு உயர்நிலைப் பள்ளி வளாகம் முழுமைக்கும் ETRP திட்டத்தின் கீழ் சுற்றுச்சுவர் அமைக்க வேதாரண்யம் நகராட்சி செயல் அலுவலர் அவர்களால் திட்டம் தயாரிக்கப்பட்டு வேதாரண்யம் நகராட்சி அலுவலக ந.க.எண். 137/211/2006, நாள்: 30-03-2007 இன்படி சென்னை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. *[முதன்மைக் கல்வி அலுவலர், நாகப்பட்டினம். அவர்களின் கடித எண். 7141/ஆ1/2011 நாள்: 25-08-2011.]*	அரசின் ஒப்புதல் பெற்று சுற்றுச்சுவர் கட்டும் பணியினை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	1045	திரு. பாலசுந்தரம், த/பெ. சின்னையன், ஒடாச்சேரி, புத்தூர் ஊராட்சி, திருக்குவளை தாலுக்கா	ஒடாச்சேரி கிராமத்தில் குடிநீர் மற்றும் குளம் தூர்வாருதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுவில் கண்ட குளமானது ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு திருக்குவளை வட்டாட்சியருக்கு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு. அவர்களின் கடித எண். 2534/11/ நாள்: 03–11–2011.]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள குளத்தில் ஆக்கிரமிப்புகள் உள்ளதா என்று நேரில் ஆய்வு செய்து அதனை அகற்றவும், தூர்வாரும் பணியினை விரைந்து முடிக்கவும் வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	1050	திரு. கலி. சக்கரவர்த்தி, பொருளாளர், காவிரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம், மெயின் ரோடு, வசிஷ்டா சேரி, வேலம்புக்குடி அஞ்சல், நாகப்பட்டினம்–609 306	தரங்கம்பாடி தாலுக்கா, அரசூர் கிராமம் அருகே வீரசோழன் ஆற்றில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆண்டாஞ்சேரி பாலம் அருகே படுக்கை அணை அருகில் 100 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், அரசூர் கிராமம் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே பெரமலை படுக்கை அணை கட்டப்பட்டுள்ளது. இதன் பக்க சுவர்கள் சேதமடைந்துள்ளது. இதனை சீர் செய்வதற்கு பராமரிப்பு தலைப்பில் ரூ. 6.50 இலட்சம் நடப்பு நிதியாண்டில் திருத்திய நிதி ஒதுக்கீட்டில் கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் வரும் மார்ச் மாதத்தில் சீரமைப்பு பணி செய்யப்படும். *[செயற்பொறியாளர், நீ.ஆது., காவிரி வடிநில கோட்டம் (கிழக்கு), மயிலாடுதுறை. அவர்களின் கடித எண். 283/ம் / கோ.38 / ச.ம.குழு / 2011 / வ2 / நாள்: 25–08–2011.]*	மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக ஆய்வு செய்து, தடுப்புச் சுவர் கட்டும் பணியை முடிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	1056	திரு.ச. அய்யப்பன், ஊராட்சி செயலாளர், அ.இ.அ.தி.மு.க. நத்தம், சோழசக்கரநல்லூர் (அஞ்சல்) சீர்காழி தாலுக்கா	நத்தம் ஊராட்சி பாசன வாய்க்காலில் பாலம் அமைத்தல் மற்றும் சாலை வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் நத்தம் ஊராட்சியில் பாசன வாய்க்காலில் பாலம் அமைப்பது மற்றும் சாலை வசதி செய்து தருவதற்கு தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் அவர்களின் கடித எண். 597/2010/அ7 நாள்: 4-11-2011.]*	நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோயில், ஊராட்சி ஒன்றியம் நத்தம் ஊராட்சியில் பாசன வாய்க்காலில் பாலம் அமைப்பது மற்றும் சாலை வசதி ஆகிய பணிகளை ஒன்றியப் பொது நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	1060	திரு. பி. கல்யாணம் குத்தாலம், நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் மீனவர் கிராமத்தில் மீன்பிடித்துறைமுகம் அமைத்துத்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
பூம்புகார் மீனவர் கிராமத்தில் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் மீன் பிடித்துறைமுகம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனில் துறைமுகம் அமைய இருக்கும் இடத்தினை மீன்வளத்துறைக்கு மாற்றம் செய்திடவும், மேலும் கீழ்கண்ட அலுவலர்களிடமிருந்து மறுப்பின்மை சான்று பெற்றிடவும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1. செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) மயிலாடுதுறை 2. வட்டார வளர்ச்சி அலுவலர், சீர்காழி 3. மாவட்ட ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் நாகப்பட்டினம் மேற்படி நிலம் மீன்வளத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டதும், மேற்கண்ட அலுவலர்களிடமிருந்து மறுப்பின்மை சான்று பெறப்பட்டதும் துறைமுகம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும். *[மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) நாகப்பட்டினம். அவர்களின் கடித எண். 214/அ3/2011 நாள்: 23-09-2011.]*	பூம்புகார் மீனவர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் விரைந்து அமைப்பதற்கான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
14	1066	திரு. குத்தாலம் க. அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், குத்தாலம் தொகுதி & வட்டம், நாகை மாவட்டம்.	மயிலாடுதுறை நகரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் வார்டு எண். 7, பிளாக் எண். 25, நகரளவு எண். 738 to 745, 747/1, 748 தென்னமரச்சாலையில் 5.91 ஏக்கர் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக கடித ந.க.எண். 6958/1998/எப்2 நாள்: 09–08–2011–ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும், அரசு புறம்போக்கு நிலமாற்றம் மற்றும் தனியார் இடங்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்யக் கோரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 6958/1998/எப்2 நாள் 02–08–2011 அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. *[ஆணையாளர்(பொ), மயிலாடுதுறை நகராட்சி. அவர்களின் கடித எண். 10565/2011/F-2 நாள்: 26–08–2011.]*	அரசின் அனுமதி கிடைத்தவுடன், இப்பணியை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
15	1068	திரு. வி. குருசாமி, வெண்மாரி குடில், ஆறுபாதி கிராமம், செம்பனார்கோயில், தரங்கம்பாடி தாலுக்கா.	ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாசன வாய்க்காலில் கலப்பதை தடுத்து நிறுத்த கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ளதால் மேற்கண்டுள்ள மனுதாரரின் புகார் குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் கோட்டம், திருவாரூர், நிர்வாக பொறியாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. நிர்வாக பொறியாளரின் 12-07-2011ம் தேதிய கடிதத்தில் ஆறுபாதி சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே சத்தியவாணன் வாய்க்காலில் விடப்படுகிறது எனவும், மேற்படி தெளிவுநீர் மாதந்தோறும் ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டு BOD அளவு மாசு கட்டுப்பாடு வாரிய தர அளவுகோலின்படி அதிகபட்சம் 20mg/ லிட்டருக்கு உள்ளது. எனவே, சத்தியவாணன் வாய்க்காலில் விடப்படும் சுத்திகரிக்கப்பட்ட தெளிவுநீர் எவ்வித பாசன சீர்கேடும் மற்றும் சுகாதார கேடும் ஏற்படாது. *[ஆணையர்(பொ) மயிலாடுதுறை நகராட்சி அவர்களின் கடித எண் 7724/99/இ2.]*	பொதுமக்கள் நலன்கருதி சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை மட்டுமே சத்தியவாணன் வாய்க்காலில் விட உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	1069	திரு. எஸ். ரமணி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வானவன் மகாதேவி, வெள்ளப்பள்ளம் நாகப்பட்டினம் மாவட்டம்.	வெள்ளப்பள்ளம் ஊராட்சி வானவன் மகாதேவி கிராமத்திற்கு கால்நடை மருத்துவ கிளை நிலையம் தொடங்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
வெள்ளப்பள்ளம் ஊராட்சி வானவன் மகாதேவி கிராமத்திற்கு புதிய கால் நடை கிளை நிலையம் தொடங்குவதற்கு வானவன் மகாதேவி கிராமம் நாலுவேதபதி கால்நடை மருந்தகத்திலிருந்து 3 கி.மீ. தூரமும் வேட்டைகாரனிருப்பு கால்நடை மருந்தகத்திலிருந்து 4 கி.மீ. தூரமும் உள்ளதால் புதிய கால்நடை நிலையம் தொடங்க அரசு விதிமுறைகளின்படி சாத்தியம் இல்லை. *[மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை நாகப்பட்டினம்–611 001. அவர்களின் கடித எண் 3864/அஉ./2011 நாள்: 8–2011.]*	வெள்ளப்பள்ளம் ஊராட்சி வானவன் மகாதேவி கிராமத்திற்கு நடமாடும் கால்நடை மருத்துவக்குழுவை அனுப்பிவைக்க குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	1074	திரு. கு. அட்சயக்குமார், கவுண்டர் தெரு, நாலுவேதபதி, வேதாரண்யம், (தாலுக்கா) நாகப்பட்டினம் மாவட்டம்.	திருத்துறைப்பூண்டியிலிருந்து நாலுவேதபதி வரை சாலையை விரிவுபடுத்தி போக்குவரத்து தொடங்கக் கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
பாரத பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இப்பணிக்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகப்பட்டினத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அவரிக்காட்டில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பாலம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. *[வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு அவர்களின் கடித எண் 2534/11/ நாள்: 03–11–2011.]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள இச்சாலையை விரிவுபடுத்த, பாரத பிரதமரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் அனுமதி கிடைத்ததும், இந்த ஆண்டுக்குள் செய்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	3872	திரு. வன்னிய சக்கரவர்த்தி, புத்தமங்கலம், கிழாய் (அஞ்சல்), மணல்மேடு.	மணல்மேடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு கட்டிடம் பெற நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலர் பெயருக்கு பட்டா வழங்கிட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக (16–11–2011) ஸ்தல ஆய்வு செய்யப்பட்டது. புல எண். 363/1A–ல் 0.51.0 ஏர்ஸ் கிராம கணக்கில், அரசு உயர்நிலைப் பள்ளி என்ற பெயரில் உள்ளது. தற்போது, மேற்படி இடம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பயன்பாட்டில் உள்ளது. 2) புல எண். 372–ல் 2.67.0 ஏர்ஸ் ரப்புஞ்சை நிலம் அரசினர் உயர்நிலை பள்ளி என்ற பெயரில் கிராம கணக்கில் உள்ளது. தற்போது, மேற்படி இடம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பயன்பாட்டிற்கும், பெண்கள் மேல்நிலை பயன்பாட்டிற்கும் எவ்வளவு இடம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற விவரத்துடன் முன்மொழிவு அனுப்பிவைத்திட வேண்டுமாய் நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி முன்மொழிவு கிடைக்கப்பெற்றவுடன் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்யப்படும். *[வட்டாட்சியர், மயிலாடுதுறை. அவர்களின் கடித எண். /2011/ஆ1/ நாள்: 16–11–2011.]*	பொதுப் பணித்துறை பார்ட்–2 திட்டத்தில் அனுமதி வழங்கி கட்டடம் கட்ட விரைந்து நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
19	3874	திரு. எம். கலாநிதி, ஆடியபிள்ளையார் கோவில் தெரு, மயிலாடுதுறை.	புதிய பேருந்து நிலையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான செலவுத் தொகையை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணைகள் இவ்வலுவலக கடித ந.க.எண். 6958/98/எப்2 நாள் 09–08–2011–ல் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

[ஆணையாளர் (பொ), மயிலாடுதுறை நகராட்சி அவர்களின் கடித எண். 13570/2011/சி6 நாள்: 15–07–2011.]

குழுவின் பரிந்துரை.
(6)

புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நகராட்சி ஆணையர் விரைந்து நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	3875	திரு. ஏ. ராஜேஷ்கண்ணன், மாரியம்மன் கோவில் தெரு, தருமபுரம், மயிலாடுதுறை.	மயிலாடுதுறை மூங்கில்தோட்டம் பால் குளிருட்டும் நிலையம் மீண்டும் இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அருகே மூங்கில் தோட்டத்தில், தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு சொந்தமான பால் குளிரூட்டும் நிலையம் கிராமப்புற பால் உற்பத்தி குறைந்ததன் காரணமாக பால் குளிரூட்டும் நிலையம் பழுதடைந்து 2001–ஆம் ஆண்டிற்கு பிறகு செயல்படவில்லை. இக்குளிரூட்டு நிலையம் அமைந்துள்ள இடம் தருமபுரம் ஆதினத்திற்கு சொந்தமானது என்பதால் வழக்கு தொடரப்பட்டு மேற்படி இடத்தை தருமபுரம் ஆதீனத்திற்கு ஆவின் நிறுவனம் ஒப்படைக்க தீர்ப்பு வழங்கப்பட்டள்ளது. இந்நிலையில், தற்போது மயிலாடுதுறை வட்டத்தில் வைத்தீஸ்வரன் கோவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான இடத்திற்கு 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான் நிறுவி பால்கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[துணைப்பதிவாளர் (பால்வளம்), திருவாரூர். அவர்களின் கடித எண். 621/2011/இ, நாள்: 17–11–2011.]*	வைத்தீஸ்வரன் கோவிலில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் பால்குளிர்விப்பான் 25 நாட்களுக்குள் அமைத்து அதன் அறிக்கையை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
21	3876	திரு. சி. மோகன்குமார், ஊராட்சி மன்றத் தலைவர், 2 கடலங்குடி ஊராட்சி, சுக்கிராபுரம், மயிலாடுதுறை வட்டம்	கடலங்குடி ஊராட்சியில் சுடுகாட்டுக்கு செல்லும் பாதையான 900 மீ மண்சாலையை சீர்செய்து தார்சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மனுதாரர் கோரியுள்ள தார்சாலை வசதி, நடப்பு நிதியாண்டில் சட்டமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையர், ஊராட்சி ஒன்றிய மயிலாடுதுறை. அவர்களின் கடித எண். 3685/11/அ4.]*	மனுதாரர் கோரியுள்ள இடத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் பணியை தாமதமாக நிறைவேற்ற குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	3877	திரு. சி. மோகன்குமார், ஊராட்சி மன்றத் தலைவர், 2, கடலங்குடி ஊராட்சி, சுக்கிராபுரம், மயிலாடுதுறை வட்டம்.	கடலங்குடி ஊராட்சிக்கு உட்பட்ட செட்டிகுட்டளை கிராமத்தில் பிரதான சாலையிலிருந்து 2.200 கி.மீ. நீளமுள்ள சாலையில் மண்பாதையாக உள்ள 800மீ சாலையை தார்சாலையாக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுதாரர் கோரியுள்ள சாலை வசதி PMGSY-VIII (BH-III) திட்டத்தில் ரூ.99.40/– (இலட்சத்தில்) செய்ய முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம் மயிலாடுதுறை அவர்களின் கடித எண். 3685/11/அ4.]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையை தார்ச்சலைகளாக மாற்ற பாரதப் பிரதமரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்புதல் பெற்று பணியினை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
23	3955	M. தங்கவேல், ஊராட்சிமன்றத் தலைவர், அரசூர்	அரசூரிலிருந்து விளாகம் வரை 3 கி.மீ. சாலை அமைத்து தருதல் மற்றும் அரசூரிலிருந்து வசிஸ்டாச்சேரி சாலை சீர் செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
அரசூர் ஊராட்சியிலிருந்து விளாகம் செல்லும் இணைப்புச்சாலை நீளம் சுமார் 3 கி.மீ. ஆகும். தற்சமயம், மேற்படி சாலை பழுதுற்ற கப்பி சாலையாக உள்ளது. இதனை செப்பனிட்டு தார்சாலையாக அமைத்திட ரூ. 60.00 இலட்சம் நிதி தேவைப்படும். அரசூர் வசிஸ்டாச்சேரி சாலை தற்பொழுது 950 மீ. மண்சாலையாக உள்ளது. இதனை செப்பனிட்டு தார்சாலையாக அமைத்திட ரூ. 20.00 இலட்சம் தேவைப்படும். ஆக கூடுதலாக ரூ. 80.00 இலட்சம் நிதி தேவையாக உள்ளது, ஒன்றிய பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை. தற்சமயம், மேற்படி சாலையினை சீர்செய்வதற்கு இயலாது. சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் சாலை சீர்செய்திட ஆவன செய்யப்படும். *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம் செப்பனார்கோயில் அவர்களின் கடித ந.க. எண். 597/2010/அ.7, நாள்: 17–11–2011.]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலைகளை சீரமைக்கும் பணியினை அடுத்த நிதி ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு-II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்து பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
1	1002	திரு. சோ. இரவிச்சந்திரன், அண்ணாப்பேட்டை, வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, வண்டுவாஞ்சேரி மின் இறைவைப் பாசன திட்டத்தின் மெயின் வாய்க்காலை (நீளம் 3300 மிட்டர்) சீரமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
வண்டுவாஞ்சேரி இறைவைப் பாசன திட்டத்தின் மெயின் வாய்க்கால் நீளம் 3300 மிட்டர் மற்றும் பாசன பரப்பு 445 ஏக்கர் ஆகும். மொத்தம் உள்ள 26 இறைவை பாசனத்திட்டங்களையும் புதுப்பிக்க ரூ. 17.60 கோடிக்கு ஒட்டு மொத்தமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் வண்டுவாஞ்சேரி மின் இறைவைத்திட்டத்திற்கு ரூ. 30.77 இலட்சம் ஒதுக்கீடு செய்து வகை செய்யப்பட்டுள்ளது. முதன்மை தலைமைப்பொறியாளர் குறிப்புரைகள் களையப்பட்டு மதிப்பீடு மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மேலும், இறைவைப் பாசன திட்ட மெயின் வாய்க்காலை வரும் நிதியாண்டில் கிடைக்கப்படும் நிதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். *[செயற்பொறியாளர், பொ.ப.து., வெண்ணாறு வடிநில) கோட்டம், திருவாரூர் அவர்களின் கடித எண். 383 எம் / கோ 110 (சமமகு) /2011 / வ1 நாள்: 12–10–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	1004	திரு கே. உதயசந்திரன், த.பெ. கலியபெருமாள், மெயின்ரோடு, பாகசாலை.	காத்திருப்பு ஊராட்சி சம்பானோடை அருகே நன்னோடை ஆற்றின் குறுக்கே பாலம் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி ஊராட்சி ஒன்றியம் காத்திருப்பு ஊராட்சியைச் சேர்ந்த சம்பானோடை அருகில் உள்ள நன்னோடை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கவேண்டுமென மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பாலம் அமைப்பது தொடர்பாக இவ்வொன்றியப் பொறியாளர்களால் தல ஆய்வு செய்யப்பட்டதில் புதிய பாலம் மற்றும் இணைப்புச் சாலை அமைப்பதற்கு ரூ. 40.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய பாலம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 30.00 இலட்சம். இந்த பாலத்திற்கான இணைப்புச் சாலை 600 மீட்டர் அமைக்க ரூ. 10.00 இலட்சம் ஆகும். புதிய பாலம் கட்டும் பட்சத்தில் பாலத்தின் மேற்புறம் சாலை அமைக்க வேண்டிய இடம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பாகசாலை ஊராட்சி தொக்கலாக்குடி குக்கிராமத்தைச் சார்ந்த தனிநபருக்கு சொந்தமானது என ஆய்வில் தெரியவருகிறது. தனிநபரிடமிருந்து சாலை அமைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டு பணிதுவங்குவதற்கு அரசிடமிருந்து சிறப்பு ஒதுக்கீடாக மேற்கண்ட மதிப்பீட்டு தொகை ரூ. 40.00 இலட்சம் தேவைப்படும். *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சீர்காழி அவர்களின் கடித எண். 041/2010/அ.5, நாள்: 17–11–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
3	1006	திரு. ஜே. கலையரசன், கோட்டையமேடு, எடமணல் அஞ்சல், சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.	சீர்காழி உப்பனாறு திருமுல்லைவாசல் பகுதியில் கடல் நீர் ஆற்றில் ஏறாமல் இருக்க எடமணல் பகுதியில் தடுப்பு அணை கட்டக் கோருதல்

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
நாகபட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் பகுதியில் வெள்ளப்பள்ளம் உப்பனாறு கடலில் கலக்கிறது. வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் கடல் நீர் உட்புகாமல் தடுப்பணை கட்ட கோரப்பட்டுள்ளது. கடலில் கலக்கும் அளைத்து ஆறுகளிலும் கடல் நீர் உட்புகாமல் தடுக்க கடைமடை ரெகுலேட்டர் கட்டும் திட்டம், தஞ்சாவூர் திட்ட தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு கோட்டத்தில் பரிசீலனையில் உள்ளது. முன்னோடி திட்டமாக (Pilot Scheme) ஹரிச்சந்திர நதியில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு அதன் சாதக பாதகங்களுக்கேற்ப மற்ற ஆறுகளிலும் திட்டம் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயற்பொறியாளர், நீ.ஆ.து., காவிரி வடிநில கோட்டம் (கிழக்கு), மயிலாடுதுறை. அவர்களின் கடித எண். எம் / கோ: 38 (ச.ம.சுழு) /2011 / வ2 நாள்: 26–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	1007	திரு ஆர். கிரிதரன், தலைவர், ஊராட்சி மன்றம், தேத்தாகுடி வடக்கு, வேதாரண்யம் தாலுக்கா.	தேத்தாகுடி வடக்கு அரக்கரை செம்போடை ஆலம்பிறை நீர் தேக்கம் வழியாக குளுந்தாளம்மன் கோவில் செல்லும் 1.5 கி.மீ. தூர சாலையை தார் சாலையாக மாற்றித்தர கோருதல்.

துறையின் குறிப்புரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
தேத்தாகுடி வடக்கு அரக்கரை செம்போடை ஆலம்பிறை நீர் தேக்கம் வழியாக குளுந்தாளம்மன் கோவில் செல்லும் சாலையை 1.5 கிமீ தூரம் தார் சாலையாக மேம்பாடு செய்ய, வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் சாலை அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம், அவர்களின் கடித எண். 2620/2011/ஆ2/நாள்: 1-11-2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	1008	திரு. தெ. இராசராசன், ஊராட்சித்தலைவர், பச்சைபெருமாநல்லூர், சீர்காழி (தாலுக்கா), நாகப்பட்டினம் மாவட்டம்.	ஆர்ப்பாக்கம் முதல் பச்சைபெருமாநல்லூர் எல்லை வரை பழுதடைந்துள்ள 2 கிலோ மீட்டர் சாலையினை தார் சாலையாக மாற்றிதரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலையில் 1 கி.மீ. மட்டுமே கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானது. இச்சாலை கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது. இதன் நீளம் 1 கி.மீ. இச்சாலையினை தார் சாலையாக அமைப்பதற்கு ரூ. 13,00,000/– செலவாகும். அரசிடமிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டால் இப்பணியினை எடுத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையர் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடித எண். 3802/2011/ ஆ.4, நாள்: 4–11–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	1011	திரு ஜெ. கலையரசன், கோட்டையமேடு, எடமணல், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	எடமணல் ஊராட்சியிலுள்ள புதுத்தெருவிற்கு செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை தார்சாலையாக அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
இச்சாலை எடமணல் கிராம ஊராட்சி சாலையாகும். அதன் நீளம் 200. மீ., மதிப்பீடு ரூ. 2,60,000. அரசிடமிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் இச்சாலையினை தார் சாலையாக அமைத்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொள்ளிடம் அவர்களின் கடித எண். 3802/2011/ஆ.4, நாள்: 04–11–2011]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	1012	திரு. ஜெ. கலையரசன், கோட்டையமேடு, எடமணல், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	எடமணல் ஊராட்சிக்கு உட்பட்ட ஒத்தாள்வெளி கிராம சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை தார்சாலையாக அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

இச்சாலை எடமணல் கிராம ஊராட்சி சாலையாகும். அதன் நீளம் 450. மீ., மதிப்பீடு ரூ. 6,00,000. அரசிடமிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் இச்சாலையினை தார் சாலையாக அமைத்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[ஆணையர், ஊராட்சி ஒன்றியம் கொள்ளிடம், அவர்களின் கடித எண். 3802/2011/அ.4, நாள்: 04–11–2011]

குழுவின் குறிப்புரை.

தற்சான் கருத்துரை.

(6)

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	1016	திரு. எம்.எஸ். முழிஞ்ஞீர், தலைவர், கடலோர கிராம பாதுகாப்பு கமிட்டி, 6/1028, பள்ளிவாசல் தெரு, வேட்டைகாரணிருப்பு, நாகப்பட்டிணம் மாவட்டம்.	கீழ்வேளூர் தாலுக்கா அலுவலகம் முன்பாக பேருந்து நிறுத்தம் அமைக்கக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கீழ்வேளூர் தாலுக்கா அலுவலகம் நாகப்பட்டினம் – மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தாலுக்கா அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் எதிர்புறம் அகரக்கடம்பனூர் கிராமத்திற்கு சொந்தமான பகுதியாகும். அவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்காக பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. (கோப்பு எண் 49/2010). மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான பகுதியில் பேருந்து பயணிகள் நிழற்குடை கட்ட பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 32 நாள் 09–11–2011 மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட பேருந்து பயணிகள் நிழற்குடை 3 மாதங்களுக்குள் கட்டி முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். *[செயல் அலுவலர், கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம், அவர்களின் கடித எண். 247/2011 நாள்: 05–09–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	1017	திரு வே. சண்முகம், 1/139, சிவன் சன்னதி, திருமருகல்–609 702.	பள்ளிக்கூடங்கள் / கல்லூரிகள் துவங்கும் மற்றும் முடியும் நேரங்களில் பேருந்து வசதி வேண்டுதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
பள்ளி / கல்லூரி துவங்கும் மற்றும் முடியும் நேரங்களில் அனைத்து தடங்களிலும் போதிய பேருந்து வசதி அளிக்கப்பட்டு உள்ளது. எனினும் குறிப்பிட்ட தடங்களில் பேருந்து தேவை என கோரப்படும் போது ஆய்வு செய்து கூடுதல் நடை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் மண்டலம், அவர்களின் கடித எண். த.அ.போக./கும்ப/சிடி 7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	1018	திரு. எம்.எஸ். முஜிபுஷரீக், தலைவர், கடலோர கிராம பாதுகாப்பு கமிட்டி, எண். 6/1028, பள்ளிவாசல் தெரு, வேட்டைக்காரனிருப்பு, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகப்பட்டினம் / வேதாரண்யம் அரசு போக்குவரத்துக் கிளைகளில் இருந்து திங்கள்கிழமைகளில் அதிக பேருந்துகள் இயக்க கோருதல் மற்றும் வேட்டைகாரனிருப்பு புதுக்கடை நிறுத்தத்தில் பேருந்து நிறுத்த கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாகப்பட்டினம்–வேதாரண்யம் தடத்தில் கழகப் பேருந்துகள் 15 மூலம் 96 நடைகளும், தனியார் பேருந்துகள் 7 மூலம் 48 நடைகளும் என மொத்தம் 144 நடைகள் தினசரி இயக்கப்படுகிறது. திங்கட்கிழமைகளில் பயன்பாட்டிற்கேற்ப கூடுதல் சிறப்பு பேரூந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வேட்டைக்காரனிருப்பு புதுக்கடை நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் நிறுத்தி பயணிகளை ஏற்றி / இறக்கிச் செல்ல அறிவுறுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதுடன், அவ்வப்போது பரிசோதகர்கள் மூலம் கண்காணிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் மண்டலம், அவர்களின் கடித எண். த.அ.கோக./கும்ப/சிடி.7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	1025	திரு. எம். ஹாஜா நஜிமுதீன், பள்ளி வாசல் தெரு, அறங்கக்குடி, தரங்கம்பாடி வட்டம்.	இளையாலூர் ஊராட்சியில் உள்ள ஊரக மருத்துவமனையை புதிதாக கட்டி மருத்துவர்களை பணியில் அமர்த்தக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாகப்பட்டினம் சுகாதார மாவட்டம் இளையாலூர் ஊராட்சி வடகரை கிராமம், செம்பனார்கோயில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்டு இளையாலூர் துணை சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது.	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.
வடகரை மக்கள் தொகை தற்போது – 1726	
இளையாலூர் மக்கள் தொகை – 5961	
வடக்கரை கிராமம் அமைந்துள்ள விபரம்	
செம்பனார்கோயில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் – 6 கி.மீ.	
கிளியனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் – 5 கி.மீ.	
சங்கரன்பந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் – 7கி.மீ.	
மயிலாடுதுறை ம.மனை சுமார் – 7 கி.மீ.	
எனவே மேற்கண்ட கிராமத்தில் தற்சமயம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது.	
[துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம், அவர்களின் கடித எண். 3287/2011/அ2, நாள்: –09–2011.]	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	1026	செயலாளர், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், நாகப்பட்டினம் டெல்டா மாவட்டங்கள், கீழ்வேளூர்–611 104, நாகப்பட்டினம் மாவட்டம்.	கீழ்வேளூர் அரசு மருத்துவமனைக்கு 24 மணி நேர மருத்துவ சேவை கிடைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கீழ்வேளூர் அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்ட மருத்துவர்கள் பணி இடம் 4. இதில் ஒரு மருத்துவர் மட்டும் பணிபுரிகிறார். 3 பணி இடங்கள் காலியாக உள்ளது. இதில் ஒதுக்கீடு செய்யப்பட்ட செவிலியர் பணி இடம் 6. இதில் 5 செவிலியர்கள் பணி புரிகின்றனர். எனவே காலியாக உள்ள மூன்று மருத்துவர்கள் பணி இடம் மற்றும் ஒரு செவிலியர் பணி இடம் இயக்குநரால் பூர்த்தி செய்யப்பட்டபின் 24 மணி நேர மருத்துவமனையாக செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (காலியாக உள்ள பணி இடங்கள் பூர்த்தி செய்ய இயக்குநருக்கு தபால் எழுதப்பட்டுள்ளது). *[சுகாதாரப்பணிகள் இணை இயக்குநர், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண். 3875/திவ/2011, நாள்: 29–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	1029	திரு. ஜே. கலையரசன், எடமணல் அஞ்சல், சீர்காழி தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம்.	சீர்காழி தாலுகா, கொள்ளிடம் ஒன்றியத்தில் அமைந்துள்ள எடமணல் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
எடமணல் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு RMSA திட்டத்தின்கீழ் புதிய கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 49.67 லட்சம் மதிப்பீட்டில் பள்ளிக்கு அருகாமையில் தானமாக வழங்கப்பட்ட 1 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய கட்டிடம் கட்டும்பணி 10–7–2011 முதல் நடைபெற்று வருகிறது. *[முதன்மைக் கல்வி அலுவலர், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 7141/ஆ 1/2011, நாள்: 25–8–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	1030	திரு. சோ. ரவிச்சந்திரன், தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராஜன் கட்டளை, அண்ணாப்பேட்டை அஞ்சல், வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம் இராஜன்கட்டளை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில் செல்லும் மின்கம்பியை வேறு பாதை வழியாக கட்டணமின்றி மாற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்ததில் இராஜன்கட்டளை–1 மின்மாற்றியிலிருந்து செல்லும் தாழ்வழுத்த மின்பாதை 3 கம்பிகள் பள்ளி வளாகத்தின் ஒருமுனையில் குறுக்காக செல்கிறது. மின்பாதை அமைத்தபின்புதான் அதன்கீழ் பள்ளி வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மின்பாதையை மாற்றித் தர வேண்டி எவ்வித விண்ணப்பமும் இதுவரை பெறப்படவில்லை. ஆகவே, மின்பாதை இடமாற்றுவதற்கு உண்டான விண்ணப்பத்தை அளித்து மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினால் மேற்கண்ட மின்பாதையை இடமாற்றித் தரப்படும். *[மேற்பார்வை பொறியாளர், நாகை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் மே.பொநாமிவநாகை/உ.செ./வ/க.எ/கோ.புகார்/அ.எண். 442/11 நாள்: 27–8–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	1032	திரு. எல். தமீமுல் அன்சாரி, ஊராட்சி மன்ற உறுப்பினர், இளையாலூர், தரங்கம்பாடி வட்டம்.	மன்னம்பந்தல்–வடகரை சாலையை அகலப்படுத்தி தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் மாவட்ட நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி அகலப்படுத்தி கோரும் சாலை, இக்கோட்ட பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான மன்னம்பந்தல்–வடகரை சாலை கி.மீ. 0/0–3/4 ஆகும். இச்சாலை தற்பொழுது 3.75 மீ அகலம் கொண்ட ஒரு வழித்தடம் கொண்ட சாலையாக தற்பொழுது பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையை 5.50 மீட்டர் அகலம் உடைய இடைவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய ரூ. 120.00 லிலட்சங்கள் தேவைப்படுகிறது. வரும் நிதி ஆண்டில் இதை ஒரு சிறப்பு திட்டமாக செயல்படுத்தவும், மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்தவும் பிரேரணை அனுப்பப்படும். *[கோட்டப்பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (நெ.), நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 7/2011/இவ.அ3/ நாள்: 24–8–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	1033	திரு. இ. வண்டுசாமி, த/பெ இடும்பன், கிராமத்தலைவர், கண்ணெரிந்தான்கட்டளை, பிராந்தியங்கரை, வேதாரண்யம் தாலுக்கா.	மயான சாலை மற்றும் மயானக் கொட்டகை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
எதிர் வரும் நிதியாண்டில் ஊரக உட்கட்டமைப்பு திட்டம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் மயானக் கொட்டகையும், சாலை மேம்பாட்டுப் பணியும் செயல்படுத்தப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம் அவர்களின் கடித எண் 2620/2011/ஆ2/ நாள்: 1-11-2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
17	1035	திரு. இரா. கணேசன், காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம், ஏரிஹரன் கூடல், பூதலூர் அஞ்சல்–609 312.	தரங்கம்பாடி–மங்கநல்லூர் சாலையில் எரவாஞ்சேரி படுக்கை அணையில் தடுப்புச் சுவர் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மனுதாரர் தடுப்புச் சுவர் அமைக்க கோரும் இடம் பொதுப்பணித் துறை கட்டுபாட்டில் உள்ள வீரசோழனாற்றில் தடுப்புச் சுவர் கட்ட கோரியுள்ளார். ஆற்றின் வலது கரையில் சுமார் 100 மீட்டர் அளவிற்கும், புளியன் குடியான் வாய்க்காலில் 100.00 மீட்டர் தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 48.00 இலட்சம் தேவைப்படுகிறது. அவ்வாறு தடுப்பு சுவர் அமைக்கப்பட்டால் ஆற்றின் வலது கரையும், தரங்கம்பாடி–மங்கநல்லூர்–ஆடுதுறை நெடுஞ்சாலையும் பாதுகாக்கப்படும். வெள்ள காலங்களில் சாலை அரிமானம் தடுக்கப்படும். இதை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி அரசிடமிருந்து மேற்கூறிய தொகையை இத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[கோட்டப்பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (நெ), நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 9/2011/இவ.அ3/ நாள்: 25–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	1038	திரு. என். முருகேசன், கே. நேதாஜி மற்றும் கிராமவாசிகள், ஸ்ரீ ஆனந்தவள்ளி சமேத அனந்தீஸ்வரசுவாமி திருக்கோயில் பக்தர் பேரவை, ஆதினங்குடி திருமருகல் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.	திருக்கோயில் நிலத்தினை பலர் ஆக்கிரமித்து குடிசை போட்டுள்ளனர். ஆக்கிரமிப்பினை அகற்றி, சிதிலமடைந்த திருக்கோயிலை புதுப்பித்து பக்தர்கள் வழிபடும் வகையில் பொது மக்கள் ஒத்துழைப்புடன் இந்து அறநிலையத்துறை வழியாக கும்பாபிஷேகம் செய்து தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
1. மேற்படி திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்துள்ள சிறிய ஆலயமாகும். திருக்கோயிலுக்கு புல.எண். 85/1–ல் 0.44.00 ஏர்ஸ் நஞ்சை நிலமும் புலஎண். 112/1–ல் 0.13.50 ஏர்ஸ் புஞ்சை நிலமும் உள்ளது. திருக்கோயிலைச்சுற்றி 113 நபர்கள் குடிசை வீடுகள் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி திருக்கோயிலை சுற்றி உள்ள குடிசைகளை வருவாய் துறை உதவியுடன் அகற்ற மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பட்டுள்ளது.	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.
2. திருக்கோயிலின் போதிய நிதி வசதி இல்லாததாலும், கிராம மக்கள் நன்கொடை மூலம் செய்ய இயலாத காரணத்தாலும் 2011–2012–ம் நிதியாண்டில் அரசுமான்யம் ரூ. 20 லட்சம் பெற்று திருப்பணி வேலைகளை செய்திட இவ்வலுவலக ந.க. 3315/2011/இ.1/ நாள்: 26–08–2011 ஆணையருக்கு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது.	
3. நிர்வாகத்தினை கவனித்திட ஏதுவாக திருமருகல் அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலின் செயல் அலுவலரை இவ்வலுவலக ந.க. 3317/2011/இ.2/ நாள்: 25–08–2011 மூலம் தக்காராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.	
[உதவி ஆணையர், உதவி ஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை, நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 3315/ 2011.இ.1/நாள்: 26–08–2011.]	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	1040	திருமதி இளவரசி ராமமூர்த்தி, ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பள்ளி ஊராட்சி, கீழையூர் ஒன்றியம்.	சுனாமியால் பாதிப்படைந்த முற்றிலும் அடித்துச் செல்லப்பட்ட புதுப்பள்ளி கிழக்குப் பாலம் தடுப்புச்சுவர் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
தற்பொழுது ஆறுகளிலும், வாய்க்கால்களிலும், பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருவதால் எதிர்வரும் கோடைப் பருவத்தில் புதுப்பள்ளி கிழக்குப் பாலம் அருகே தடுப்புச் சுவர் கட்டித்தர மதிப்பீடு தயார் செய்து நிதிநிலைமைக் கேற்ப 2011–2012–ஆம் நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். [செயற் பொறியாளர், பெ.ப.து. வெண்ணாறு வடிநில கோட்டம், திருவாரூர், அவர்களின் கடித எண் எம்/கோ/110(சமமகு)/2011/வ1/ நாள்: –2011.]	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	1046	திரு. பி. எஸ். சேதுபதி, கிராம நாட்டாண்மை, ஆறுகாட்டுத்துறை அஞ்சல், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.	வேதாரண்யம் கடற்கரையில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
வேதாரண்யம் நகராட்சி மூலம் கருத்துரு பெற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்து சுற்றுலாத் துறையின் நிதி மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[சுற்றுலா அலுவலர், பூம்புகார், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்களின் கடித எண் 147/க/2011 நாள்: 26–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	1048	திரு. ஆர். கிரிதரன், தலைவர், தேத்தாகுடி வடக்கு ஊராட்சி மன்றம், வேதாரண்யம் வட்டம், நாகை மாவட்டம்.	வேதாரண்யத்தில் இருந்து நெய்விளக்கு, தேத்தாகுடி தெற்கு, தேத்தாகுடி வடக்கு, மீனாபருவவெளி மற்றும் அரக்கரை, செம்போடை அரசு மேல்நிலைப் பள்ளி, ஈரவாய்க்கால் வழியாக நாகப்பட்டினத்திற்கு பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
வேதாரண்யம்–நாகப்பட்டினம் (வழி) நெய்விளக்கு, தேத்தாகுடிதெற்கு, வடக்கு, அரக்கரை, செம்போடை, ஈரவாய்க்கால் தட நீளம் 56 கி.மீ நாகப்பட்டினம்–செம்போடை வரை 40 கி.மீ. தடப்பகுதியில் கழகப் பேருந்து 15 மூலம் 96 நடைகளும், தனியார் பேருந்து 7 மூலம் 48 நடைகளும், என தினசரி 144 நடைகள் இயக்கப்படுகிறது. நெய்விளக்கு–தேத்தாகுடி வடக்கு வரை 10 கி.மீ. தடப்பகுதியில் மினிப் பேருந்து 6 நடை இயக்கப்படுகிறது. தேத்தாகுடி வடக்கு–அரக்கரை வரை சாலை பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் நெய்விளக்கு–தேத்தாகுடி வடக்கு வரை பெரிய பேருந்து இயக்க இயலாத அளவிற்கு சாலை குறுகலாக உள்ளது. மேற்படி சாலை பேருந்து இயக்க தக்க அளவிற்கு அமைக்கப்பட்ட பிறகு ஆய்வு செய்து தேவைக்கேற்ப நடை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[மேலாண் இயக்குனர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/சிடி 7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	1054	திரு. பி.எஸ். சேதுபதி, கிராம நாட்டாண்மை, ஆறுகாட்டுத்துறை அஞ்சல், வேதாரண்யம் வட்டம், நாகை மாவட்டம்.	ஆறுகாட்டுத்துறை சுனாமி நகரிலிருந்து வேதாரண்யம் வரை பனையங்காடு, குப்பையங்காடு, வனதுர்கையம்மன் கோயில் கீழ்சாலை வழியாக வேதாரண்யம் பேருந்து நிலையம் வரை தார்ச்சாலை அமைத்து தரகோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேற்கண்ட இடங்களை ஆய்வு செய்தும், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் 30-07-2011 ஆய்வு கூட்ட அறிவுரைப்படியும், குப்பையன்காடு, பனையன்காடு வனதுர்க்கையம்மன் கோயில் கீழ்சாலை பேருந்து நிலையம் வழியாக தார் சாலை அமைப்பதற்கு ரூ. 25.62 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. *[செயல் அலுவலர் (மு.கூ.பொ.) வேதாரண்யம் நகராட்சி அவர்களின் கடித எண் 1013/2011/அ3. நாள்: 24-08-2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	1057	திரு. R.M. ரெங்கராஜன், 1/11 அண்டர்காடு, 49, ஆதணூர் ஊராட்சி அஞ்சல், வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஆதணூர் ஊராட்சியில் பொதியிள்ளை கடைத்தெருவிலிருந்து அண்டர்காடு மேற்புகுதி (பாலம் வரை) திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ள தெருவிளக்கு எரியாதது தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேற்படி மின்பாதையிலுள்ள கம்பிகளை சீரமைத்து 2 தெருவிளக்குகள் எரிய வைக்கப்பட்டுள்ளன. *[மேற்பார்வை பொறியாளர், நாகை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் மே.பொ/நாமிப/நாகை/உ.செ.பொ/வ/க.எ/கோ.புகார்/அ.எண். 444/11 நாள்: 27–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	1058	திரு. ஆர்.எம். ரெங்கராஜன், 49, ஆதனூர் ஊராட்சி முறைஞாயநல்லூர் அஞ்சல்–614 810, வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	மானங்கொண்டான் வடிகாலின் குறுக்கே சரகம் 13.00 கி.மீட்டரில் (SH 63–ல் மைல் 90/6ல்) அமைந்துள்ள தரைப்பாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றக்கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மானங்கொண்டனாறு வடிகால் சரகம் 13.00 கி.மீட்டரில் அமைந்துள்ள தரைப்பாலம் (Size 0.90M 12 Nos) வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம் கட்டப்பட்டதாகும். இந்த தரைப்பாலத்தை அகற்றி விட்டு புதிய உயர்மட்ட பாலம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் மூலமாக அல்லது நெடுஞ்சாலைத்துறை (கிராமசாலை) நாகப்பட்டினம் அலுவலகம் மூலம் கட்டப்பட வேண்டும். போதுமான அளவு Vent Size உடன் புதிய கான்கீரிட் பாலங்கள் அமைக்க திருத்துறைப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து ந.க. எண். 4838/207/இ3 (வளர்ச்சி)/நாள்: 11–06–2007ல் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. *[செயற்பொறியாளர், பொ.ப.து., வெண்ணாறு வடிநில கோட்டம், திருவாரூர் அவர்களின் கடித எண் 383 எம்/கோ/110/சமமகு) 2011/ வ1 நாள்: 12–10–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	1063	திரு. எம். காளிமுத்து, புதுச்சேரி (ஊ) முன்னாள் உறுப்பினர் ஆவராணி புதுச்சேரி (P.O.) சிக்கல் (வழி) நாகை மாவட்டம்.	நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் பாப்பாகோயில் வழியாக வடக்காலத்தூர் இலுப்பூர் சாலையை தார்சாலையை அமைத்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
பாப்பாகோயில்–வடக்காலத்தூர் இலுப்பூர் சாலையை தார்சாலையாக அமைத்திட ஒன்றிய பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்த வகையில் மேற்காணும் பணியை செய்து முடித்திட சுமார் 84.31 லட்சம் தேவைப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். தற்போது ஒன்றிய பொது நிதியில் போதிய நிதி இல்லை என்பதால் ஏதேனும் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டால், மேற்காணும் பணியை செய்து முடிக்கலாம். *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 2470/2011/அ.4/ நாள்: 28–10–2011.]*	இப்பணியை PMGSY திட்டத்தின் வாயிலாக செய்து முடிக்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற சட்டப்பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	1064	திரு. வி. சுப்பிரமணியன், நாகக்குடையான் (அஞ்சல்) வேதாரண்யம் தாலுக்கா.	நாகக்குடையான் கள்ளிமேடு செல்லும் மண் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்தும் ஈரவாய்க்காலில் பாலம் அமைக்கவும் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாகக்குடையான் கள்ளிமேடு செல்லும் மண் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்வதற்கும், ஈரவாய்க்காலின் குறுக்கே பாலம் அமைப்பதற்கும் வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் சாலை அமைக்கவும், பாலம் கட்டித்தரவும் நடவடிக்கை எடுக்கப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம், அவர்களின் கடித எண் 2620/2011/ஆ2/ நாள்: 1-11-2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
27	1065	திரு. என். எஸ். ராஜவேலு, நாடார் தெரு, குட்டிதேவன்காடு, தாணிக்கோட்டகம் (அஞ்சல்), வேதாரண்யம் தாலுக்கா.	குட்டிதேவன்காடு பெரியகுளம் மயான கரைக்கு செல்லும் களி மண் சாலையை மேம்பாடு செய்தும் ஆக்கிரமிப்புகளை அகற்றி தரவும் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஊராட்சி மூலம் அகற்ற ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்சாலையை ஊராட்சி நிதியிலிருந்து செப்பனிட ஊராட்சி மன்றத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம், அவர்களின் கடித எண் 2620/2011/ஆ2/ நாள்: 1-11-2011.]*	இப்பணி செய்து முடிக்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
28	1067	தலைவர், பெற்றோர் ஆசிரியர் கழகம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நீர்முளை–614 711, திருக்குவளை தாலுக்கா.	தலைஞாயிறு ஒன்றியம், நீர்முளை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
தலைஞாயிறு ஒன்றியம், நீர்முளை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அனைவருக்கும் கல்வித்திட்டம் துவங்குவதற்கு முன் தொடங்கப்பட்ட பள்ளியாகும். அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் துவங்கப்படும் நடுநிலைப்பள்ளிக்கு மட்டுமே கணக்கு, அறிவியல், ஆங்கிலம் பாட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் இப்பள்ளி மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப சென்னை, தொடக்க கல்வி இயக்குநர் அவர்களால் ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் இக்கல்வியாண்டில் வழங்கப்படும்.	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

[மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், நாகப்பட்டினம் அவர்களின் 4179/அ2/2011, நாள்: 5–9–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	1070	திரு. எஸ். ரமணி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வாணவன் மாகாதேவி, வெள்ளப்பள்ளம், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம்–மாவட்டம்.	வேதாரண்யம் வட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் புதிய மாணவர்/ மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
சென்னை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் அவர்களுக்கு வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மாணவர், மாணவியர் விடுதி அமைத்திட கோரி பரிந்துரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. *[மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 16700/2011/ எல்.2, நாள்: 23–08–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	1071	திரு. எஸ். ரமணி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பள்ளம், நாகப்பட்டினம் மாவட்டம்.	வெள்ளப்பள்ளம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் கொள்முதல் நிலையம், புதிய கட்டிடம் கட்ட தெரிவித்துள்ள இடம், குளம் புறம்போக்காகும். குளம் புறம்போக்கில் புதிய கட்டிடம் அமைக்க இயலாது. விவசாயிகளின் நலன் கருதி வரும் சம்பா பருவத்தில் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் தற்காலிக நெல் கொள்முதல் நிலையம் திறந்து நெல் கொள்முதல் செய்யப்படும். *[முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் பொ.வா. கழகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் ப்பி1/100763/2011, நாள்: 26-8-2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
31	1073	திரு. ஆ. மதர்ஷா மரைக்காயர், கலிபா சாஹிப் தெரு, பொதுமக்கள், நாகூர்.	மழைநீர் வடிகால் அமைத்துத் தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தெருவில் தற்போது பாதாளச்சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் பணிமுடிவுற்றவுடன் சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்துத் தரப்படும். *[ஆணையர் (பொது), நகராட்சி அலுவலகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 5595/2011/இ1.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
32	1080	திரு. கு. அட்சயக்குமார், கவுண்டர் தெரு, நாலுவேதபதி, வேதாரண்யம், (தாலுக்கா), நாகப்பட்டினம் மாவட்டம்.	வேதாரண்யம் முதல் நாகப்பட்டினம் உள்ரோடு வழி சாலையை விரிவுபடுத்த கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
வேதாரண்யத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் உள்ரோடு வழியாக பெரியகுத்தகை புஷ்பவனம், நாலுவேதபதி, வெள்ளப்பள்ளம், விழுந்தமாவடி, வழியாக செல்லும் சாலை நன்றாக பராமரிக்கப்பட்டு தற்போது பேருந்து இயக்கப்பட்டுவருகிறது. *[வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு அவர்களின் கடித எண் 2534/11/03–11–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
33	1081	திரு. மு. இராமநாதன், ஊராட்சி மன்றத் தலைவர், சின்னத்தும்பூர், நாகப்பட்டினம் மாவட்டம்.	சின்னத்தும்பூர்–வேளாங்கண்ணி இடையே உள்ள காணல் என்ற காட்டாற்றில் பாலம் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பாலம் அமைக்கும் இடம் வேளாங்கண்ணி பேரூராட்சியை சேர்ந்தது. வேதாரண்யம் கால்வாயில் சுமார் 18.00 மீட்டர் அகலம் உள்ளது. மேற்படி பாலம் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 40.00 லட்சம் ஆகும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம் கீழையூர், அ.கு.எண் 611 103 அவர்களின் கடித எண் 2886/2011/ஆ4, நாள்: 30–8–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
34	3871	திரு. பா. பாவ்ஜி, கீழத்தெரு, சித்தமல்லி, மயிலாடுதுறை வட்டம்.	நடராஜபுரம்–வரதம்பட்டு இடையே உயர்மட்ட பாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் கோரியுள்ள நடராஜபுரம்–வரதம்பட்டு இடையே பழவாறு பாலம் அமைக்க சுமார் 1,500 கோடி செலவாகும். PMGSY திட்டத்தில் பாலம் அமைக்க மத்திய அரசுக்கு ஏற்கனவே முன்மொழிவு அனுப்பட்டுள்ளது. *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மயிலாடுதுறை அவர்களின் கடித எண் 3685/I1/அ4.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
35	3879	திரு. P. செந்தில்குமார், No.2 சாரதா காலனி, தெற்குவீதி, திருவிழந்தூர், மயிலாடுதுறை.	மயிலாடுதுறை திருவிழந்தூர் பகுதியில் விநாயகர் காலனியில் சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரரின் கோரிக்கையின்படி மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டது. வார்டு எண் 2 திருவிழந்தூர் பகுதியில் உள்ள விநாயகா காலனி தெரு பகுதிக்கு சாலை வசதி அமைத்து தருவதற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் பெற்று சாலை வசதி செய்து தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையாளர்(பொ), மயிலாடுதுறை நகராட்சி அவர்களின் கடித எண் 13460/2011/இ1.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.


வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
36	3880	திரு. ச. ராமு, நல்லாடை ஊராட்சி, செம்பனார் கோவில்.	செம்பனார்கோவில் கோணகுறி பிள்ளை வாய்க்கால் சாலை, மற்றும் கீழ அக்ரஹாரம் நல்லாடை சோதனைச்சாவடி இணைப்பு சாலையை தார் சாலையாக மாற்றித் தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், நல்லாடை ஊராட்சி கோனகுறி பிள்ளை வாய்க்கால் சாலை தற்போது மண் சாலையாக உள்ளது. மேற்கண்ட சாலை 900 மீட்டர் நீளமுள்ளது. இந்த சாலையை தார் சாலையாக அமைக்க ரூ. 14.00 லட்சம் தொகை தேவைப்படும். அரசு நிதி ஒதுக்கீடு செய்தால் மேற்கண்ட பணியினை நிறைவேற்ற இயலும். இச்சாலையினை அமைத்தால் நல்லாடை ஊராட்சியில் உள்ள மக்களும், எரவாஞ்சேரி, கூடலூர் போன்ற ஊராட்சி மக்களும் பயனடைவார்கள். நல்லாடை ஊராட்சியில் உள்ள கீழ அக்ரஹாரம் முதல் நல்லாடை சோதனைச் சாவடி வரை உள்ள சாலை 1450 மீட்டர் மண் சாலையாக உள்ளது. மேற்கண்ட சாலையில் ஒரு சிறுபாலம் அமைக்கவும், ரூ.28.00 லட்சம் தொகை தேவைப்படும். அரசு நிதி ஒதுக்கீடு செய்தால் மேற்கண்ட பணியினை நிறைவேற்ற இயலும். *[ஆணையர் ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் அவர்களின் கடித எண் 597/2010/அ.7, நாள்: 15–11–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
37	3956	திரு. தி. இராசையன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், இலுப்பூர்.	இலுப்பூர் கடைவீதி புலியங்குடி பாசன வாய்க்காலில் தலைப்பை மாற்றித்தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
இலுப்பூர் ஊராட்சி புலியங்குடி பாசன வாய்க்கால் மகாத்மாகாந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின்கீழ் 2009–2010ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், இலுப்பூர் கடைத்தெரு வழியாக செல்லும் வாய்க்காலை மூடுவதற்கு இயலாது. *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் அவர்களின் கடிதம் எண் 597/2010/அ.7, நாள்: 17–11–2011.]*	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். முகவரியும். (2)	மனுதாரரின் பெயரும் (3)	மனுவின் சுருக்கம். (4)
1	1015	திரு. சோ. ரவிச்சந்திரன், அண்ணாப்பேட்டை அஞ்சல், வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், இராஜன்கட்டளை கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு மின் இணைப்பு வழங்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
இராஜன்கட்டளை கிராமத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்திற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்படவில்லை. ஆகவே மின்இணைப்பு வேண்டி ஊராட்சி மன்றத் தலைவரிடம் இருந்தோ, ஆணையரிடமிருந்தோ விண்ணப்பம் பெறப்பட்டால் உடன் மின் இணைப்பு வழங்கப்படும். *[மேற்பார்வை பொறியாளர், நாகை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் மே.பொ/நாமின/நாகை/உ..செ.பொ/வ/க.எ/கோபுகார்/ அ.எண் 441/11, நாள்: 27–8–2011.]*	19–11–2011 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	1019	திரு. கே. இராதாகிருஷ்ணன், ஊராட்சி கழக செயலாளர், த/பெ. குமாரசாமி, பாகசாலை & அஞ்சல், சீர்காழி தாலுக்கா, நாகை மாவட்டம்– 609 117.	மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து கொண்டத்தூர் பாகசாலை வழியாக சீர்காழிக்கு 12 நடைகள் இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மயிலாடுதுறை–சீர்காழி (வழி) கொண்டத்தூர், பாகசாலை வழித்தடத்தில் 113B மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கோரியுள்ளவாறு, இரவு நேரத்தில் 2 நடைகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[மேலாண் இயக்குனர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/சிடி 7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	மனுதாரர் கோரிய வழித்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்கப்படுவதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
3	1020	திரு. தெ. இராசராசன், ஊராட்சித் தலைவர், பச்சப்பெருமாநல்லூர் & அஞ்சல், சீர்காழி தாலுக்கா–609 104.	சீர்காழி தடம் எண் 487ஏ–யை பழைய நேரத்திலேயே சீர்காழி முதல் பழையார் வரை இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
சீர்காழி தடம் எண் 487A–ன் அனைத்து நடைகளும் சீர்காழி பழையாறு தடத்தில் கோரி உள்ள நேரத்தில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/சிடி 7/நா60/2011, நாள்: 29–08–2011.]*	பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருவதாக தெரிவித்ததன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	1031	திரு. J. கலையரசன், கோட்டையமேடு, எடமணல்–அஞ்சல், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம்.	சீர்காழி தாலுக்கா, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி கால்நடை மருந்தக கட்டிடம் கட்டிதர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
எடமணல் கால் நடை மருந்தகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு தலைமை அலுவலகம் அனுப்பட்டுள்ளது (கோப்பு எண் 1237/அ4/211) *[மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் 3864/அ2/2011, நாள்: 8–2011.]*	கட்டடப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	1034	திரு. G. மனோகரன், 2–வது வார்டு, சீனுவாசபுரம், பட்டமங்கலம் ஊராட்சி மயிலாடுதுறை ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.	பட்டமங்கலம் ஊராட்சி சீனுவாசபுரத்தில் உள்ள தெருக்களில் செல்லும் வடிகால் வாய்க்காலில் மருத்துவமனை மற்றும் வீடுகளிலிருந்து செல்லும் கழிவுநீர் கலப்பதை நிறுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் பட்டமங்கலம் ஊராட்சி சீனுவாசபுரத்தில் உள்ள பாரதியார் தெரு மற்றும் ராஜாஜி தெரு பின்புறம் செல்லும் வடிகால் வாய்க்கால் ஆய்வு செய்யப்பட்டது. திருமுருகன் நகர், கண் மருத்துவமனை மற்றும் திருவாரூர் சாலையில் உள்ள கசிமா காம்ப்ளக்ஸ் குடியிருப்போர் ஆகியோரிடம் தக்க அறிவுரைகள் வழங்கி, கழிவுநீரை வடிகால் வாய்க்காலில் கலப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. *[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மயிலாடுதுறை அவர்களின் கடித எண்.3685/11/அ4 நாள்: 03–09–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	1036	திரு. R.S. இராமசுப்பு (தலைவர்), பொது மக்கள் பாதுகாப்பு உரிமைகள் நலப்பேரவை, குரவப்புலம், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம்.	மூடிக் கிடக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் திறக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(5)
நாகப்பட்டினம் சுகாதார மாவட்டம் வேதாரண்யம் வட்டத்தில் உள்ள குரவப்புலம் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையமானது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இந்த துணை சுகாதார நிலையத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர் தங்கி கிராம மக்களுக்கு மருத்துவப்பணிகள் செய்து வருகிறார். *[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண்.3284/2011/அ2, நாள்: 26–08–2011.]*	துணை சுகாதார நிலையம் தற்போது இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	1042	திரு. ஆர்.எஸ். இராமகப்பு, தலைவர், பொது மக்கள் பாதுகாப்பு உரிமைகள் நல பேரவை, குரவப்புலம், வேதாரண்யம் தாலுக்கா.	மிகவும் தாமதமாக போடப்படும் குரவப்புலம் தென்னம்புலம் சாலையை விரைவாக முடிக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.	
(5)	(6)	
மனுதாரர் தெரிவித்துள்ள சாலை 2007–08ம் ஆண்டு பி.எம்.ஜி.எஸ்.ஒய். பேஸ்–2 திட்டத்தில் 3180 மீட்டர் ரூ.1.04 கோடி செலவில் தார் சாலையாக மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று முடிவுற்றது. *[வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம் அவர்களின் கடித எண்.2620/2011/அ2 நாள்: 1–11–2011.]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள தார்சாலையை மேம்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளதாக மாவட்ட திட்ட அலுவலர், உறுதியளித்தன் பேரில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.	73

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	1049	தலைவர், ஜாமியா மஸ்ஜித், நீடூர், மயிலாடுதுறை.	நீடூர் பள்ளிவாசல் அருகில் வேகத்தடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் கோரியுள்ள நீடூர் மெயின்ரோடு, நீடூர் பள்ளிவாசல் அருகே வேகத்தடை விரைவில் அமைத்து தரப்படும். *[கோட்டப்பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (நெ), நாகப்பட்டினம் அவர்களின் க.எண்.7/2011/இவ.அ3 நாள்: 24-08-2011.]*	வேகத்தடை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதற்கிணங்க நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	1052	திரு. ஆர். தெய்வசகாயம், த/பெ. ராமையன், செம்பியவளாகம், அருந்தவம்புலம், நீர்முளை கிராமம்.	குடிநீர் இணைப்பு அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
செம்பியவளாகம் கடைத்தெருவில் குடிநீர் வழங்குவதற்கு நீர்முளை ஊராட்சி மன்றத் தலைவரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு அவர்களின் கடித எண்.2534/11 நாள்: 03–11–2011.]*	மனுதாரர் கோரியுள்ள கோரிக்கைக்கு தலைஞாயிறு வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் ஒரு வாரத்திற்குள்குடிநீர் இணைப்பு வழங்குவதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து, இப்பணி நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	1062	திரு. அ. வீரக்குமார், எரித்திடல், திருக்குவளை அஞ்சல் & தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம்– 610 204.	திருக்குவளை ஊராட்சி எரித்திடல் பகுதிக்கு குடிநீர் கிடைத்திட ஆவன செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
திருக்குவளை ஊராட்சி எரித்திடல் பகுதிக்கு பழுதடைந்த குழாய்கள் மாற்றப்பட்டும், புதிய குழாய்கள் விஸ்தரிப்பு செய்யப்பட்டும் குடிநீர் தொடர்ந்து வழங்கப்படுகிறது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம், கீழையூர், அரு.எண்.611 103 அவர்களின் கடித எண்.2886/2011/ஆ4 நாள்: 05–09–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	1078	திரு. ந. வீரமணி, வானங்காடு, தாணிக்கோட்டகம், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.	நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தாணிக்கோட்டகம் கிராமத்தில் வானங்காடு மற்றும் சின்னபெருமாள்காடு குறைந்த மின் அழுத்த குறைபாட்டை சரி செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவின் அடிப்படையில் 25–08–2011 அன்று இரவு 7 மணிக்கு மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. இந்த பகுதிகளுக்கு வண்டுவாஞ்சேரி II என்ற மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்களில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. ஏற்கனவே செல்லும் தாழ்வழுத்த மின்பாதை தொலைவு அதிகம் இருப்பதாலும் மின் கம்பிகள் பழையதாக இருப்பதாலும் இந்த குறைபாடு உள்ளது. ஆகவே அருகில் உள்ள கோபாலகட்டளை IV மின்மாற்றியிலிருந்து இணைப்பு மின்பாதை அமைத்து குறைந்த மின் அழுத்த குறைபாடு விரைவில் சரிசெய்யப்படும். *[மேற்பார்வை பொறியாளர், நாகை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் மே.பொ/நாமபிவ/நாகை/உ.செ.பொ/வ/க.எ.கோ.புகார்/ அ.எண்.445.11 நாள்: 27–08–2011.]*	புதிய மின்மாற்றி அமைத்து மின் அழுத்தக் குறைபாடு சரி செய்யப்பட்டுள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	3878	திரு. பி. ஆண்டனி விஜய், 49, கணபதி நகர், 3வது குறுக்குத் தெரு, மயிலாடுதுறை.	மயிலாடுதுறை நகரப்பூங்காவை மக்கள் பயன்படுத்தும் பூங்காவாக மாற்றிடக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
டாக்டர் வரதாச்சாரியார் நகர பூங்காவில் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பழுதடைந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை ஜூன் மாதம் 2011ல் அப்புறப்படுத்தி ஏற்கனவே இருந்த வண்டிப்பேட்டை இடத்திற்கு மாற்றப்பட்டு பூங்காவினை சுத்தம் செய்து குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பயன்பாட்டில் உள்ளது. *[ஆணையாளர் (பொ), மயிலாடுதுறை நகராட்சி அவர்களின் கடித எண்.13460/2011/இ1.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.